**தலைப்பு – 145 – மீள் குடியேற்ற அமைச்சு**

**கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2013 ஆம் ஆண்டு**

---

## 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

மீள் குடியேற்ற அமைச்சின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணைக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2014 நவம்பர் 12 ஆம் திகதி அமைச்சின் செயலாளருக்கு வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். ஆவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.2 கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

ஒதுக்கீட்டுக் கணக்கு, இணைக்கக் கூற்று என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணைக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 1.3 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி அறிக்கைகள் மற்றும் ஏடுகளின் பிரகாரம் மீள் குடியேற்ற அமைச்சின் ஒதுக்கீட்டுக் கணக்கும், இணக்கக் கூற்றும் இங்கே (அ) மற்றும் (ஆ) இல் காண்பிக்கப்பட்ட அவதானிப்புக்கள் மற்றும் கீழே 1.4 தொடக்கம் 1.7 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்ட பிரதான கணக்காய்வு அவதானிப்புக்களைத் தவிர்த்து திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது அவதானிக்கப்பட்டது.

### (அ) பதிவேடுகள் மற்றும் ஏடுகள் பேணப்படாமை

அமைச்சிற்குச் சொந்தமான ரூபா 123,501,145 பெறுமதியான நிலையான சொத்துக்கள் 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றறிக்கையின் படி நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

### (ஆ) ஒதுக்கீட்டுக் கணக்கு

#### (i) மொத்த ஏற்பாடுகள் மற்றும் செலவுகள்

அமைச்சிற்காக வழங்கப்பட்டிருந்த மொத்தத் தேறிய ஏற்பாடுகள் ரூபா 505,011,500 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் இதில் ரூபா 486,977,088 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் தேறிய ஏற்பாட்டில் ரூபா 18,034,412 தொகை அதாவது 3.6 சதவீதம் சேமிக்கப்பட்டிருந்தது.

| செலவினம் | 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடுகள் | பயன்பாடுகள் | சேமிப்புக்கள் | |
| | ரூபா | ரூபா | ரூபா | |
| மீண்டெழும் | 177,892,000 | 167,876,412 | 10,015,588 | 5.6 |
| மூலதனம் | 327,119,500 | 319,100,676 | 8,018,824 | 2.4 |
| மொத்தம் | 505,011,500 | 486,977,088 | 18,034,412 | 3.6 |

**(ii) பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

- செலவின விடயமொன்றிற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 300,000 தொகையான மொத்த தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தன.

- 14 செலவின விடயங்களுக்காக மிகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமை காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய ஏற்பாட்டில் 20 சதவீதத்திற்கும் 95 சதவீதத்திற்கும் இடையிலான வீச்சினைக் கொண்டிருந்தது.

- 4 செலவின விடயங்களுக்காக குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடுகளின் மூலம் ரூபா 30,687,000 தொகையான நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அதில் ரூபா 5,251,439 தொகையான நிதி ஏற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது.

**(இ) அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள்**

அமைச்சின் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கிற்காக பாராளுமன்றத்தினால் விதிக்கப்பட்டிருந்த எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இலக்கம் | செலவினம் | | பெறுவனவு | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளவாறானவை | ஆகக்கூடிய எல்லை | உள்ளவாறானவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| 14501 | 6,000,000 | 1,940,972 | 2,400,000 | 3,639,614 | 17,000,000 | 7,411,628 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

விடய இல. 14501 இன் முற்பணக் கணக்குகள் தொடர்பான 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்களின் பிரகாரம்

அத்திகதியில் அறவீடுகள் நிலுவையாக இருந்த தனிப்பட்ட மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 239,205 ஆக இருந்ததுடன் அந்நிலுவை மீதிகளை அறவீடுசெய்வதற்கு அமைச்சு தவறியிருந்தது.

## 1.4 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### உள்ளகக் கணக்காய்வு

உள்ளகக் கணக்காய்வுப் பிரிவு தாபிக்கப்பட்டு 3 வருடங்கள் கடந்த போதிலும் அதற்காக உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தரொருவர் நியமிக்கப்படாதிருந்ததுடன் பதில் கடமை அடிப்படையில் உள்ளகக் கணக்காய்வு உத்தியோகத்தரொருவர் செயற்பட்டிருந்தார்.

## 1.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 2010 திசெம்பர் 17 ஆந் திகதிய பீஎப்/மெய்மையாய்வுச் சபை/01 ஆம் இலக்க அரசாங்க நிதிப் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தினால் திருத்தப்பட்ட 2009 திசெம்பர் 09 ஆந் திகதிய 441 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றுநிருபத்தின் பிரகாரம் 2013 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு 2014 மார்ச் 31 ஆந் திகதிக்கு முன் அவ்வறிக்கை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், அமைச்சினால் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2014 யூன் 30 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2013 ஆம் ஆண்டிற்குரிய மெய்மையாய்வுச் சபை அறிக்கைகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்ட மிகைகள், பற்றாக்குறைகள் மற்றும் ஏனைய பரிந்துரைகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 760 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 1.6 செயலாற்றல்

மீளாய்வாண்டில் அமைச்சின் செயலாற்றல் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) வெலிஓய வீடமைப்பு நிர்மாணச் செயற்திட்டம்**

வெலிஓய வீடமைப்பு நிர்மாணச் செயற்திட்டம் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(i) செயற்திட்டத்தின் முதலாவது கட்டத்தில் 500 வீடுகளை நிர்மாணித்தல் நோக்கமாக இருந்ததுடன் அதில் 459 வீடுகளின் வேலைகள் முடிவடைந்திருந்தன. அதில் வேலைகள் முடிவுறாத 16 வீடுகளின் நிர்மாண நடவடிக்கைகள் கைவிடப்பட்டிருந்தன. மேலும் 25 வீடுகளின் வேலைகள் முழுமையாகப் பூர்த்திசெய்யப்பட்டிருக்க வில்லை.

(ii) மேற்கூறப்பட்ட செயற்திட்டத்தின் இரண்டாவது கட்டம் 2013 ஏப்ரல் மாதத்தின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2013 யூலை மாதம் வரையில் 356 வீடுகளின் வேலைகளை பூர்த்திசெய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்காக ரூபா 117,000,000 கிரய மதிப்பீடொன்று தயாரிக்கப்பட்டிருந்தது. இதற்காக அமைச்சிற்கு ரூபா 74,657,303 தொகையும், முல்லைத்தீவு மாவட்ட செயலகத்திற்கு ரூபா 32,531,625 தொகையும் நிதிஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. 2014 ஒக்தோபர் 15 ஆந் திகதி வரையிலும் இரண்டு வீடுகள் மாத்திரம் முழுமையாகப் பூர்த்திசெய்யப்பட்டிருந்தன.

**(ஆ) கெலேபோகஸ்வெவ மீளக் குடியமர்த்தல்**

வவுனியா மாவட்டத்தில் கெலேபோகஸ்வெவ கிராமத்தில் இடம்பெயர்ந்த 1,500 குடும்பங்களை குடியமர்த்துவதற்காக வவுனியா மாவட்ட செயலாளருக்கு 02 குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீட்டு அனுமதிப் பத்திரங்களின் மூலம் ரூபா 28,000,000 தொகையான நிதி ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்தது. வவுனியா மாவட்ட செயலகத்தால் இடம்பெயர்ந்த 1,500 குடும்பங்களுக்காக சீமெந்து பக்கற்றுக்கள் மற்றும் கூரைத் தகடுகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், இடம்பெயர்ந்த 682 குடும்பங்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட பொருட்கள் தொடர்பான விபரம் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(இ) அனுராதபுரம் பதவிய பிரதேசத்தில் மீளக் குடியமர்த்தல்**

அனுராதபுரம் பதவிய பிரதேசத்தில் 650 குடும்பங்களை மீளக் குடியமர்த்தும் நடவடிக்கைக்காக குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடுகளின் மூலம் ரூபா 4,999,452 தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்தது. அந்த

இடம்பெயர்ந்த குடும்பங்களில் 312 குடும்பங்கள் தொடர்பான பெயர்ப்பட்டியல் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 7,800 கூரைத் தகடுகளும், 5,200 சீமெந்து பக்கற்றுக்களும் கொள்வனவு செய்தமை தொடர்பான செலவின அறிக்கையொன்று அமைச்சிற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஈ) நலன்புரி சேவைகளை வழங்குதல்**

நலன்புரி சேவைகளை வழங்குவதற்காக 07 மாவட்டங்களுக்கு ரூபா 30,933,961 தொகையான நிதி ஏற்பாடு வழங்கப்பட்டிருந்த போதிலும் 2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு நலன்புரி சேவைகளை வழங்குதல் தொடர்பான விரிவான அறிக்கையொன்று அமைச்சினால் பெறப்பட்டிருக்கவில்லை.

## 1.7 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரும் உள்ளபடியான பதவியணியினரும்**

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலைமை பின்வருமாறு இருந்தது.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 11 | 08 | 03 | - |
| (ii) | மூன்றாம் நிலை | 05 | 02 | 03 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 85 | 47 | 38 | - |
| (iv) | ஆரம்ப நிலை | 27 | 23 | 04 | - |
| (v) | ஏனையவை (அமைய/தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | - | 07 | - | 07 |
| | மொத்தம் | 128 | 87 | 48 | 07 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்பு மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதி வரையில் 48 வெற்றிடங்களை நிரப்புவதற்கு அமைச்சு தவறியிருந்தது. அவ்வாறே இரண்டாம் நிலையில் 38 வெற்றிடங்களுக்குரிய 27 அபிவிருத்தி உதவியாளர் பதவிகள் காணப்பட்டதுடன் அதற்காக உத்தியோகத்தர்களைச் சேர்ப்பதற்கு மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.